செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-61 ஜனவரி, 2026



அனைவருக்கும் *புத்தாண்டு* மற்றும்
பொங்கல் நல் வாழ்த்துக்கள்



எதிர்ப்புகளை எதிர்கொள்வோம் - தாக்குதல்களை தகர்த்திடுவோம்
போராட்டக் களத்தில் புலரும் புத்தாண்டு

இந்திய நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாளர்களும் ஒன்றிணைந்து போராடிவரும் தருணத்தில் புலரும் புத்தாண்டின் அண்மையில், வங்கி ஊழியர்களின் கேடயமாய் விளங்கும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஸ்தாபன தினம் **20-04-2026** அன்று வரவிருக்கின்றது. இந்தியாவில் வங்கி ஊழியர்களின் பணிவிதி முறைகளை மாற்றியமைத்து மேம்படுத்திய அந்த மாபெரும் தொழிற்சங்க அமைப்பின் **80**வது ஸ்தாபன நாளைக் கொண்டாட இப்புத்தாண்டில் நாடு முழுவதும் உள்ள வங்கி ஊழியர்கள் உற்சாகத்துடன் எதிர்நோக்கி உள்ளனர்.

1946 ஆம் ஆண்டு ஏப்ரல் **20** ஆம் நாள், ஒரு சில தொலைநோக்கு தோழர்களின் உறுதி, தைரியம் மற்றும் நம்பிக்கை ஆகியவை ஒரு தொழிற்சங்க இயக்கமாக உருவெடுத்து, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் இந்திய நாட்டில் வங்கி ஊழியர்களின் மீது மிகவும் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளை ஏவிக்கொண்டிருந்த தனியார் வங்கி உரிமையாளர்களின் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வருவதை உறுதி செய்வதற்காக, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தியாகங்கள் மற்றும் துன்பங்களை எதிர் கொண்டு பல்வேறு போராட்டங்களை அன்றிலிருந்தே முன்னெடுத்தது.




இந்திய நாட்டின் வங்கித்துறை தனியார் பெரு முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்த அந்த நாட்களில், வங்கி ஊழியர்கள் அன்றாடம் அனுபவித்த துயரத்தின் ஆழத்தையும், வங்கி நிர்வாகங்களின் மனிதாபிமானமற்ற அடக்குமுறைகளையும் தற்போதைய தலைமுறை தோழர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் போராட்டங்களின் விளைவாக 56 ஆண்டுகளுக்கு முன்பு, 1969 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் தேதி 14 பெரிய வங்கிகளைத் தேசியமயமாக்குவதாக அறிவித்தபோது, அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி இந்நடவடிக்கை மூலம் குறையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

வங்கிகள் ஈட்டும் லாபம் நாட்டு வளர்ச்சிக்கேயன்றி தனியார் கொள்ளையடிக்க அல்ல

வங்கி ஊழியர்களின் உழைப்பு மற்றும் பொது மக்களின் சேமிப்பினால் வங்கிகள் ஈட்டும் அபரிமிதமான லாபம் நாட்டின் வளர்ச்சிக்கோ அல்லது ஊழியர்களின் வாழ்க்கை மேம்படவோ உதவுவதில்லை. மாறாக, அதைத் தனியார் பெருமுதலாளிகளின் தேவைகளுக்கு பெருமளவு அளிப்பதும் பின்னர் அவர்களுக்கு சலுகை அளித்து தள்ளுபடி செய்வதன் விளைவாக இந்திய நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் மட்டுமே குவியும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொது மக்களின் அபரிமிதமான சேமிப்புக்கு பாதுகாப்பும் உறுதியும் அளிக்கப்படுவதோடு, அதுவே அவர்களின் வறுமையை ஒழிக்கவும் உதவிட வேண்டும் என்ற நோக்கத்தை அடைவதற்காக அரசாங்கம் வங்கித் தொழிலை அரசுடைமை ஆக்க வேண்டும் என்று 80 ஆண்டுகளுக்கு முன்பு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முதல் மாநாட்டிலேயே நம் ஸ்தாபனத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



1969 மற்றும் 2025-க்கு இடையில், வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 8200-லிருந்து 90000-க்கும் மேலாக உயர்ந்துள்ளது. 1969-ல் கிராமப் புறங்களில் 500 கிளைகள் மட்டுமே இருந்தன. இப்போது அது 35000-க்கும் அதிகமாக விரிவடைந்துள்ளது. வங்கித் தொழிலை தொலைதூர கிராமப்புறங்களுக்குக் கொண்டு சென்றதன் பரவலை இந்த புள்ளிவிவரங்கள் மூலம் காணலாம். ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வங்கிகளின் மொத்த வைப்புத்தொகை சுமார் 5000 கோடியாக இருந்தது. இப்போது அது 140 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது.

56 ஆண்டுகளுக்கு முன்பு முன்னுரிமைத் துறை கடன் என்ற கருத்து இருக்கவில்லை. இப்போது வங்கிக் கடன் வழங்கலில் 40%-க்கும் மேல் முன்னுரிமைத் துறை கடன் வழங்கல் கொள்கை இந்தியாவின் பரந்த விவசாயத் துறை, சிறு தொழில்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புதிதாக உருவாகி வரும் START-UP நிறுவனங்களில் வங்கி கடன் தேவைப்படுபவர்களுக்கு முன்னுரிமை அளித்து வங்கி நிதி உதவி பெறுவதை தேசியமயம் உறுதி செய்கிறது.

வங்கிகள் தேசியமய நடவடிக்கையால், மக்களின் சேமிப்பு மக்களின் நலனுக்கு உதவிடும் வகையில் அனைவரின் மூலதனமாக மாறியுள்ளது. ஆயினும், அதிகாரத்துவத் தலையீடு, உயர்மட்ட நிர்வாகத்தின் கூட்டுச்சதி, உள்ளார்ந்த ஊழல் மற்றும் கோடீஸ்வரக் கடன் வாங்குபவர்களின் நேர்மையின்மை ஆகிய காரணங்களால் தனியார் பெருநிறுவனங்களின் வாராக்கடன்கள் வேகமாக அதிகரித்து வங்கிகளின் செயல்பாட்டினை சீர்குலைக்கின்றன.

மக்களின் சேமிப்பினை கடன் மோசடியாளர் கபளீகரம் செய்திட துணை போகும் அரசு

மார்ச் 31, 2012 மற்றும் மார்ச் 31, 2025ம் ஆண்டுகளுக்கு இடையில், வங்கிகளின் மொத்த வாராக்கடன் ரூ 1,17,000 கோடியிலிருந்து ரூ 2,19,000 கோடியாக உயர்ந்துள்ளது. இந்தியாவில் மட்டுமே, வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களை, வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர்கள் (**WILFUL DEFAULTERS**) என்று குறிப்பிடப்படும் விசித்திரமான போக்கு காணப்படுகிறது. இதன் பொருள், கடன் வாங்கியவர்களுக்குத் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் இருந்தும், அதைத் திருப்பிச் செலுத்தும் விருப்பமோ அல்லது நோக்கமோ இல்லை என்பதாகும். இத்தகைய மோசடியாளர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தொடர்ந்து கோருகின்றது.

மோசடியான முதலாளிகளின் இழிவான நேர்மையின்மை அனைவருக்கும் தெரிந்ததே என்பதால், இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தச் சூழ்நிலையில்தான், நாட்டின் தற்போதைய ஒன்றிய ஆட்சியாளர்கள் பொதுத்துறை வங்கிகளைத் தனியார் மயமாக்கும் தங்கள் அரசியல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தீவிரமான நடவடிக்கைகளைத் துவங்கியுள்ளனர்.



கடந்த 2025, நவம்பர் மாதம் மும்பையில் நடைபெற்ற ஒரு வங்கிக் கருத்தரங்கில் உரையாற்றிய ஒன்றிய நிதி அமைச்சர், இந்தியாவிற்கு உலகத் தரம் வாய்ந்த வங்கிச் சேவை அவசியம் என்று கூறினார்.

வங்கிகளில் சிறு அளவிலான கடன் வழங்குதல், முன்னுரிமைத் துறைக்குக் கடன் வழங்குதல் போன்றவற்றுக்கு கடனளிப்பதைக் குறைத்து, பெரும் தொழிலதிபர்களின் மூலதனங்களுக்கு உதவிடும் வகையில் இந்தியாவில் உள்ள வங்கிகள் கடன் வழங்கும் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டால் மட்டுமே உலகத் தரம் வாய்ந்த வங்கிகளுக்கு இணையாக இந்திய வங்கிகள் இருக்க முடியும் என்றும், இந்நிலையை அடைந்திட வேண்டுமெனில் மேலும் பல வங்கிகள் இணைப்பு தேவைப்படுகின்றன என்றும் அறிவித்துள்ளார். இக்கருத்து, ஒன்றிய அரசின் வங்கிகளை தனியார்மயப்படுத்தும் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

மேலும், வெளிநாட்டு வங்கிகள் இந்தியாவில் எளிதாகச் செயல்படுவதற்கு சலுகைகளை வழங்க வேண்டும் என்பது ஒன்றிய அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. ஏற்கனவே பல தனியார் துறை வங்கிகள் தங்கள் வங்கிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கினை 49% வரை அதிகரித்து இத்தகைய செயல்முறையைத் தொடங்கியுள்ளன. தற்போது இந்தியாவில் செயல்படும் சுமார் 8 முதல் 10 தனியார் வங்கிகளை வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் முழுமையாக கபளீகரம் செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் நிர்மாணத்திற்கு உதவிடும் பொதுத்துறை வங்கிகளை புதைக்கும் முயற்சி

ஒன்றிய அரசின் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொள்ளாது, பொதுத்துறை வங்கிகளை மென்மேலும் பலப்படுத்துவதற்கு மாறாக, அவற்றினை பலவீனப்படுத்தி, தனியாருக்குத் தாரை வார்க்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன. எனவே பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாப்பதும், தனியார்மயமாக்கும் முயற்சிகளை முறியடிக்க போராட வேண்டியதும் நம் ஒவ்வொருவருடைய தலையாய கடமை ஆகும்.

இந்திய நாட்டின் வங்கித்துறையினை பலப்படுத்தி நாட்டின் நிர்மாணத்திற்கு உதவிடும் வகையில் மாற்றியமைக்க 56 ஆண்டுகள் ஆனது. ஆனால், அதை இடித்துத் தள்ளுவதற்கு தற்போதுள்ள ஒன்றிய அரசிற்கு இவ்வளவு நீண்ட காலம் தேவைப்படப் போவதில்லை. ஆகையினால், ஒன்றிய அரசின் இத்தகைய முயற்சிகளை முறியடிக்க நாம் வலிமையான, ஒன்றிணைந்த போராட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம்.



அரசின் தாராளமயக் கொள்கை காரணமாக இந்திய நாட்டில் பல வெளிநாட்டு வங்கிகளின் ஊடுருவலாலும், அத்தகைய அந்நிய நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கு அரசின் சலுகைகள் காரணமாக கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருப்பதாலும், இந்திய வங்கித் துறையின் முழுமையான வடிவம், இயல்பு மற்றும் செயல்பாடு ஆகியவை மிகப்பெரிய மாற்றங்களுக்கு உள்ளாகி தேச நலனுக்கு எதிராக மாற்றப்படும் என்பது திண்ணம்.

அத்தகைய செயல்பாட்டு மாற்றங்களை கண்காணிக்கும் மாபெரும் சக்தியாக, போராட்டங்களை முன்னெடுத்து, தனியார்மயம் மற்றும் அந்நியமய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திடும் பலம் வாய்ந்த அரணாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் என்றென்றும் விளங்கும்.

பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாக்க புத்தாண்டில் மீண்டும் சபதமேற்போம்

வங்கிகள் தனியார்மய நடவடிக்கைகளை எதிர்கொண்டு தடுத்து நிறுத்தும் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் போன்ற ஸ்தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலகட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஸ்தாபன நாள் உறுப்பினர்களால் அனுசரிக்கப்படவுள்ளது. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இலட்சக்கணக்கான தோழர்கள் இப்போராட்டக் களத்தில் முன்னணியில் அணிவகுத்து, பொதுத்துறை வங்கிகள் மீதான மக்கள் உரிமையினை என்றென்றும் பாதுகாப்பார்கள்.

புத்தாண்டில் உன்னதமான இந்த நோக்கத்திற்காக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் போராட்டங்களை வலிமையாக முன்னெடுத்துச் செல்வதற்கு வங்கி ஊழியர்கள் அனைவரும் சூளுரை ஏற்போம்.

யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் வெள்ளி விழா மாநாடு – கோவை

தமிழ் மாநில யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் 25வது வெள்ளி விழா மாநாடு கோயம்புத்தூரில் கடந்த டிசம்பர் மாதம் 13 மற்றும் 14ம் தேதிகளில் வெற்றிகரமாக நடைபெற்றது. இம்மாநில மாநாட்டில் சங்கத்தின் ஒற்றுமை, வலிமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் 1,700 தோழர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



வெள்ளிவிழா மாநாட்டினைக் குறிக்கும்விதமாக கோவை சின்னியம்பாளையம் பகுதியில் ஏராளமான வங்கி ஊழியர் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் துவக்கி வைத்தார்.

தோழர் E அருணாசலம் அவர்கள் தனது துவக்க உரையில் தற்போது இந்திய நாட்டு வங்கித் துறை எதிர்கொள்ளும் கடுமையான சவால்களை எடுத்துரைத்தார். மேலும், ஒன்றிய அரசால் இந்தியத் தொழிலாளர் மீது திணிக்கப்பட்டுள்ள தொழிலாளர் சட்டங்கள் எவ்வாறு உழைக்கும் வர்க்கத்தை மோசமாகப் பாதிக்கும் என்பது குறித்தும் விரிவாக விளக்கினார்.

பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களில் தோழர்களின் தீவிரப் பங்கேற்பு மற்றும் ஒற்றுமையின் அவசியத்தையும் தோழர் E அருணாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.

மாநாட்டில் யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் **N** சங்கர், பல்வேறு மாநில யூனியன் வங்கி ஊழியர் சங்கங்களின் பொறுப்பாளர்கள், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் மாவட்ட செயலாளர் தோழர் **M** ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.



சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்ற வெள்ளி விழா கொண்டாட்டங்களின் இரண்டாம் நாளில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், புதிய தொழிலாளர் சட்டங்களால் எழும் முக்கியமான பிரச்சினைகள் குறித்தும், குறிப்பாக வங்கித் துறையில் நிரந்தர வேலைவாய்ப்பை பறித்து ஊழியர்களின் பணிப்பாதுகாப்பிற்கு இச்சட்டங்கள் அச்சுறுத்தலாக இருப்பது குறித்து விரிவாக விளக்கினார். இச்சட்டங்கள் கூட்டு பேரம் பேசும் உரிமையை பலவீனப்படுத்தி, வழக்கமான வேலைகளை ஒப்பந்தமயமாக்குவதற்கு வழிவகுக்கின்றன என்று அவர் எச்சரித்தார். போதுமான புதிய நியமனங்கள் இன்றி வங்கிகளில் நிலவும் கடுமையான மனிதவளப் பற்றாக்குறையையும் அவர் எடுத்துரைத்தார்.



கடந்த காலத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டங்களை நினைவு கூர்ந்த அவர், தொடர்ச்சியான மற்றும் ஒன்றுபட்ட இயக்கங்கள் எவ்வாறு தொழிலாளர் வர்க்கத்திற்கு போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தன என்பதை விளக்கி, இவ்வுரிமைகள் எந்த விலை கொடுத்தேனும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், அதற்காக முழு உறுதியுடன் தொழிலாளி வர்க்கம் எதிர்த்துப் போராடும் என்று தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் அறிவித்தார்.

வெள்ளி விழா நிகழ்வினைக் குறிக்கும் வகையில் பாலின சமத்துவம் குறித்த பிரத்யேக கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் தோழர் **Dr A R** சாந்தி, தேசிய செயலாளர், **NFIW**, தோழர் **D** லெனின், **AITUC** ஆகியோர் கருத்துரை ஆற்றினர். பாலின சமத்துவத்தை உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய சமூகநீதியினை உள்ளடக்கிய பணிக் கலாச்சாரத்தை உருவாக்குவது அனைத்து தோழர்களின் சமூகப் பொறுப்பு என்று கருத்தரங்கில் உரையாற்றிய பேச்சாளர்கள் வலியுறுத்தினர்.



மாநாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, **EYE FOUNDATION SUPER SPECIALITY** கண் மருத்துவமனையுடன் இணைந்து ஊழியர்களுக்கான குடும்ப சுகாதார திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வங்கி நகை மதிப்பீட்டாளர்கள் மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் பங்கேற்ற சிறப்பு அமர்வும் நடைபெற்றது.



பெரும் உற்சாகத்துடனும் ஒற்றுமையுடனும் வெற்றிகரமாக நிறைவடைந்த மாநாட்டின் இறுதியில் தோழர் **M** சங்கரேஸ்வரன் அவர்கள் அவைத் தலைவராகவும், தோழர் **A** சிதம்பரம் அவர்கள் தலைவராகவும், தோழர் **E** நாகேந்திரன் அவர்கள் பொதுச் செயலாளராகவும், தோழர் **V** வெற்றிவேல் அவர்கள் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு மாநில யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் புதிய பொறுப்பாளர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டி வாழ்த்துகின்றது.

பொள்ளாச்சி நகர வங்கி ஊழியர் சங்கத்தின் 15வது மாநாடு - 21-12-2025

பொள்ளாச்சி நகர வங்கி ஊழியர் சங்கத்தின் பதினைந்தாவது மாநாடு கடந்த **2025,** டிசம்பர் மாதம் **21**ம் தேதி பொள்ளாச்சி நகரில் எழுச்சியுடன் நடைபெற்றது. பொள்ளாச்சி நகரில் பணியாற்றும் **150**க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியாக, மூத்த தோழர் தோழர் **G** ரகுபதி அவர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கொடியினை ஏற்றி வைத்தார்.

பொள்ளாச்சி நகர வங்கி ஊழியர் சங்கத் தலைவர் தோழர் R செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர்




E அருணாசலம் அவர்கள் தோழர் பர்வானாவின் படத்தை திறந்து வைத்து துவக்கி வைத்தார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் மற்றும் கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில் துவக்கவுரை ஆற்றிய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் சம்மேளனத்தின் அனைத்து அறைகூவல்களையும் பொள்ளாச்சி நகர வங்கி ஊழியர் சங்கம் சிறப்பாக அமல்படுத்துவதாக புகழ்ந்துரைத்தார்.

மேலும் தன்னுடைய உரையில், ஒன்றிய அரசின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை கண்டித்ததுடன், இதனை எதிர்த்து மேலும் தீவிரமாகப் போராட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தி, அதற்கான போராட்டங்களில் உறுப்பினர்கள் முழு அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்று தோழர் E அருணாசலம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்ற உதவித் தலைவர் வழக்கறிஞர் தோழர் பா நி சிநேகா அவர்கள் ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் விரோத சட்டங்கள் உழைக்கும் பெண்கள் உரிமைகளை வெகுவாக பாதிக்கும் வகையில் உள்ளது குறித்து எடுத்துரைத்தார்.





மாநாட்டின் இறுதியில் புதிய நிர்வாகிகளாக தோழர் R செல்வராஜ் (கனரா வங்கி) அவர்கள் தலைவராகவும், தோழர் R ஜெயபிரகாஷ் (இந்தியன் வங்கி) அவர்கள் பொதுச் செயலாளராகவும், தோழர் R ஜெயபிரகாஷ் (பெடரல் வங்கி) அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பொள்ளாச்சி நகர வங்கி ஊழியர் சங்கப் பொறுப்பாளர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக ஊழியர்கள் போராட்டம்

காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீட்டை (FDI) அனுமதிக்க முடிவு செய்துள்ள ஒன்றிய அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கடந்த 2025, டிசம்பர் 18 அன்று மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.





ஊழியர் சங்கங்கள், பாலிசிதாரர்கள் அல்லது பொது மக்கள் எவருடனும் எவ்வித ஆலோசனையும் செய்யப்படாமல் கடந்த 2025, டிசம்பர் 16 அன்று நாடாளுமன்றத்தில் AMENDMENT OF INSURANCE LAWS BILL-2025 மசோதா நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்து வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளைச் சேர்ந்த முக்கிய தொழிற்சங்கங்களால் விடுக்கப்பட்ட நாடு தழுவிய போராட்ட அழைப்பின் ஒரு பகுதியாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

ஒன்றிய நிதி அமைச்சரால் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை 74%லிருந்து 100% ஆக உயர்த்த வகைசெய்வதன் மூலம் இந்திய நாட்டின் காப்பீட்டுத் துறை கடுமையாக சீர்குலையும் என்று ஊழியர்களும் தொழிற்சங்கங்களும் கடுமையாக எதிர்த்துள்ளன.



1999ம் ஆண்டில் அப்போதைய ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசுதான் காப்பீட்டுத் துறையில் முதன்முதலில் 26% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்தது. பின்னர் 2015-ல் இது 49% ஆகவும், 2021-ல் 74% ஆகவும் அதிகரிக்கப்பட்டது. தற்போது ஒன்றிய ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டத்தின்படி, வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய அரசாங்கம் அல்லது இந்திய நிறுவனங்களின் ஆதரவின்றி நேரடியாக காப்பீட்டுத் தொழில்களை நமது நாட்டில் தொடங்கிட வழிவகை செய்கின்றது.

இத்தகைய சட்டமும் நடவடிக்கைகளும், காப்பீட்டு நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதோடு, இது இந்தியாவின் நிதி இறையாண்மை மீதான ஒரு கடுமையான தாக்குதலாகும்.

ஒன்றிய பாஜக அரசாங்கம் தனது நாடாளுமன்றப் பெரும்பான்மையை தவறாகப் பயன்படுத்தி, முறையான விவாதம் இல்லாமல் குரல் வாக்கெடுப்பு மூலம் நாட்டு நலனுக்கு எதிரான இதுபோன்ற மசோதாக்களை நிறைவேற்றுகிறது. ஒன்றிய அரசு தனது முடிவை வாபஸ் பெறாவிட்டால், நாடு முழுவதும் பெரிய அளவிலான போராட்டங்கள் நடைபெறும் என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.



தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மையங்களில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற நம் தோழர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டுகின்றது.

வாரத்திற்கு ஐந்து நாட்கள் வங்கிச் சேவையை அமல்படுத்தக்கோரி வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்

வங்கிகளில் வாரம் ஐந்து நாள் சேவை முறையை அமல்படுத்துவது தொடர்பான கோரிக்கை **IBA**வினால் ஒன்றிய அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும் அனைத்து சனிக்கிழமைகளையும் வங்கி விடுமுறை நாட்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை செயல்படுத்தாது ஒன்றிய அரசு தொடர்ந்து காலம் தாழ்த்தி வருகின்றது.

நிதித்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கி, **LIC** மற்றும் **GIC** ஆகிய நிறுவனங்களில் ஐந்து நாட்கள் வேலைத்திட்ட நடைமுறை ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வங்கிகளில் இந்த நடைமுறையினை ஏற்க ஒன்றிய அரசு தாமதித்து வருகின்றது.



கடந்த **27-11-2025** அன்று நடைபெற்ற **UFBU** கூட்டத்தில் ஏற்கனவே ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் எட்டப்பட்ட இக்கோரிக்கையினை நிறைவேற்றாத ஒன்றிய அரசாங்கத்தின் போக்கிற்கு நம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அகில இந்திய வேலைநிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு போராட்டத் திட்டங்களை வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

போராட்ட திட்டத்தில் அறிவித்தபடி கடந்த **23-12-2025** அன்று சென்னையில் **UFBU** அமைப்பின் சார்பில் அண்ணா சாலையில் அமைந்துள்ள ஸ்டேட் வங்கி அலுவலகம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏராளமான தோழர்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் கலந்துகொண்டு நம் கோரிக்கை தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தை விபரங்கள் மற்றும் அரசாங்கத்தின் மெத்தனப் போக்கு குறித்து உரையாற்றினார்.



இதே போன்ற ஆர்ப்பாட்டங்கள் **30-12-2025** அன்று மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நகர மையங்களில் ஏராளமான வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் **UFBU** சார்பில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இக்கோரிக்கையினை வென்றெடுக்க நாடு தழுவிய வேலைநிறுத்தம் அறிக்கப்படவுள்ளது. **UFBU** அறிவித்துள்ள தர்ணா மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்களில் நமது உறுப்பினர்கள் முழு அளவில் பங்கேற்க தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராக நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் - 12-02-2026

அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் போராட்ட அறைகூவல்

மத்திய தொழிற்சங்கங்களின் (CTU) கூட்டமைப்பு, நான்கு புதிய தொழிலாளர் சட்டங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினை(MGNREGA) சிதைக்கும் புதிய சட்டம், புதிய காப்பீட்டுச் சட்டம், மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப் படுத்தும் சட்டங்கள் ஆகியவற்றைக் கண்டித்தும் அவற்றை அமல்படுத்துவதற்கு எதிராகவும், பிப்ரவரி 12, 2026 அன்று நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.



2026, ஜனவரி 9-ஆம் தேதி புதுடில்லியில் நடைபெறவிருக்கும் தொழிலாளர்களின் தேசிய மாநாடு (NATIONAL WORKERS CONVENTION) பொது வேலை நிறுத்த அழைப்பை முறைப்படி அங்கீகரித்து, போராட்ட திட்டங்களை அறிவிக்கவுள்ளது.

மத்திய தொழிற் சங்கங்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், பல்வேறு சட்டங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் மக்களின் உரிமைகள் மற்றும் சலுகைகள் மீதான பன்முகத் தாக்குதல் என்று குற்றம் சாட்டியுள்ளன. நரேந்திர மோடி அரசாங்கம் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் மீது நடத்தும் இத்தகைய தாக்குதல்கள் குறித்து தொழிற்சங்கங்கள் ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ளன.

பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள், IDBI வங்கியை விற்பனை செய்வதற்கான முடிவு, தனியார் வங்கிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கையகப்படுத்த அனுமதிக்கும் சட்டங்கள், பெருநிறுவனக் கடன் வாங்கியவர்களின் பெரும் வாராக் கடன்களை மிகக் குறைந்த விலைக்குத் தொடர்ந்து விற்பனை செய்வதன் மூலம் வங்கிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படச் செய்வது , மண்டல ஊரக வங்கிகளில் முதலீடுகளைத் திரும்பப் பெறும் முடிவு, கூட்டுறவு வங்கிகளில் தனியார் மூலதனத்தை அனுமதிப்பது, பொதுத்துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிப்பது போன்ற அரசாங்கத்தின் பலதரப்பட்ட தாக்குதல்களை எதிர்த்து வங்கி ஊழியர்கள் போராடி வருகின்றனர்.

வங்கிகளில் வாரத்தில் ஐந்து நாள் வங்கிச் சேவையை அறிமுகப்படுத்த IBA ஒப்புக்கொண்ட போதிலும், ஒன்றிய அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளிக்காது தாமதப்படுத்துகின்றது. வங்கிகளில் எழுத்தர் மற்றும் துணைப் பணியாளர்களைப் போதுமான அளவில் நியமிக்காமல், வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மீது அதிக பணிச்சுமை சுமத்தப்பட்டுள்ளது.

அந்நிய நாட்டு நிறுவனங்களுக்கு உள்நாட்டு காப்பீட்டு நிறுவனங்களைக் கையகப்படுத்தும் உரிமையை கட்டுப்பாடின்றி வழங்கும் விதமாக காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீடு சட்டத்தினை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது.



மேலும், நிலையான அணுசக்திப் பயன்பாடு மற்றும் மேம்பாட்டுச் சட்டம் (SHANTI) மூலம், மிகுந்த அபாயம் கொண்ட அணு ஆற்றல் துறையை பெரும் அளவிலான தனியார் மற்றும் அன்னிய முதலீட்டுக்கு திறந்து விடுவது நமது நாட்டின் அணுசக்திப் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை மீதான ஒரு தாக்குதலாகும்.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு சட்டத்தை VB G RAM G என்று பெயரை மாற்றியதோடு, இந்த திட்டத்தில் பணி புரியும் கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பாதிப்பிற்கு உள்ளாகும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டத் திருத்தம் எதிர்க் கட்சிகளின் கடுமையான எதிர்ப்பினையும் மீறி ஒன்றிய அரசால் அமலாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மக்கள் விரோத மற்றும் தொழிலாளர் விரோத சட்டங்களை ஒன்றிய அரசாங்கம் ரத்து செய்யாவிட்டால், மத்திய தொழிற்சங்கங்கள் துறைசார் போராட்ட நடவடிக்கைகள் மற்றும் தொடர் பொது வேலைநிறுத்தம் உட்பட வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும் என்றும் மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிய அரசை எச்சரித்துள்ளன.

2026, பிப்ரவரி 12 அன்று நடைபெறவுள்ள மாபெரும் நாடு தழுவிய தொழிலாளர் பொது வேலைநிறுத்தத்தின் கோரிக்கைகளை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு விளக்கிடும் வகையில் விரிவான பிரச்சாரத்தைத் தொடங்கி, தீவிரமான போராட்டத்திற்காக தங்களின் அமைப்புகளைத் தயார்படுத்துமாறு இந்திய நாட்டின் ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தையும் மத்திய தொழிற்சங்கங்கள் கேட்டுக்கொண்டுள்ளன.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கான எட்டாவது ஊதிய உயர்வு கோரிக்கை சாசனம் பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பிப்பு

கடந்த 60 ஆண்டுகளாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்காக பல்வேறு ஊதியத் திருத்த ஒப்பந்தங்களை தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் பேச்சுவார்த்தை மற்றும் போராட்டங்கள் மூலம் பெற்றுத் தந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கான ஊதிய ஒப்பந்த காலம் 31 12 2025 உடன் நிறைவு பெறுகிறது. எனவே, தமிழ்நாட்டில் அமைந்துள்ள 24 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு இம்மாதம் 01 01 2026 முதல் ஊதிய உயர்வு மற்றும் மேம்பட்ட பணிவரன் கொண்ட ஒப்பந்தம் எட்டப்படுவதற்கான புதிய கோரிக்கை சாசனம் தயாரிக்கும் வகையில் மாநில சங்கத்தினால் கருத்துக் கேட்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இக்குழுக்கள் மாநிலத்தின் வேலூர், திருச்சி, சேலம் மற்றும் நெல்லை நகரங்களில் சிறப்புக் கூட்டங்களை நடத்தி, அக்கூட்டங்களில் அந்தப் பகுதிகளைச் சார்ந்த நமது சங்கத்தின் பொறுப்பாளர்களும், முன்னணித் தோழர்களும் பங்கேற்று கோரிக்கை சாசனத்தில் இடம்பெற வேண்டிய முக்கியமான அம்சங்கள் குறித்த தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

இக்குழுவினால் இறுதி செய்யப்பட்ட புதிய ஊதிய உயர்வுக்கான கோரிக்கை சாசன வரைவு தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் G வைரப்பன் அவர்களிடம் கடந்த 21-11-2025 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.



அதன் அடிப்படையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 01 01 2026 முதல் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ள புதிய ஊதிய உயர்வு மற்றும் பணிவரன் நிலைகளில் நமது சங்கத்தின் கோரிக்கைகள் கொண்ட 8வது ஊதிய ஒப்பந்தத்திற்கான கோரிக்கை சாசனம் மாநில சங்கத்தினால் இறுதி செய்யப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் G வைரப்பன் அவர்கள் தலைமையில் நமது மாநில சங்க நிர்வாகிகளால் கடந்த 26 12 2025 அன்று மாநிலப் பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நாம் சமர்ப்பித்துள்ள 8வது கோரிக்கை சாசனத்தில் உள்ள அம்சங்களை பதிவாளர் அவர்களிடம் நமது மாநில சங்க பொதுச் செயலாளர் தோழர் G வைரப்பன் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார். கோரிக்கை சாசனம் தொடர்பாக விரைவாக பேச்சுவார்த்தையினை துவக்கி, விரைந்து ஒப்பந்தம் காண ஆவன செய்யப்படும் என பதிவாளர் அவர்கள் உறுதி அளித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, நமது மாநில சங்கப் பொதுச் செயலாளர் தோழர் G வைரப்பன், மாநில நகர வங்கி ஊழியர் சம்மேளனப் பொதுச் செயலாளர் தோழர் A சுப்பிரமணியன், மற்றும் சென்னை, வேலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கங்களின் பொதுச் செயலாளர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வழிகாட்டுதலில் பல்வேறு ஒப்பந்தங்களைப் பெற்றுத் தந்த தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம், இம்முறையும் சிறந்த ஒரு ஊதிய ஒப்பந்தத்தை விரைவாக வென்றெடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நம் தலைவர்களின் தியாக வரலாற்றினைப் போற்றி நினைவு கூர்வோம்



தோழர் P பாலகிருஷ்ணன்

முன்னாள் பொதுச் செயலாளர்
அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம்

முன்னாள் தலைவர்
தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

முன்னாள் மத்தியக் குழு உறுப்பினர்
அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்

8ம் ஆண்டு நினைவு தினம்
10 ஜனவரி 2026

நமது இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவரான தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த 10-01-2018 அன்று நம்மை விட்டுப் பிரிந்திடினும், வங்கி ஊழியர் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற நிறைந்துள்ளார்.

தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள், அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவராகவும், மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினராகவும் நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக பொறுப்பேற்று, வங்கி ஊழியர் இயக்கத்திற்கும், குறிப்பாக கூட்டுறவு வங்கி ஊழியர் பணி விதி மேம்பாட்டிற்காகவும் தன்னுடைய வாழ்நாள் முழுமையும் அர்ப்பணித்தவர்.

தன்னுடைய கல்லூரி நாட்களிலேயே, மாணவர் இயக்கத்தில் தீவிரமாக பணியாற்றிய தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் 1966 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் பணியில் சேர்ந்தார். கூட்டுறவு வங்கிகளில் தொழிற்சங்க இயக்கம் முழுமையாக கட்டமைக்கப்படாத அன்றைய காலகட்டத்தில், தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடத் துவங்கினார்.

வங்கி ஊழியர் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர்களான தோழர் N சம்பத் மற்றும் தோழர் C S சுப்ரமணியம் ஆகியோரின் தலைமைப் பண்புகளால் பெரிதும் ஈர்க்கப்பட்ட தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள், மறைந்த தோழர் V P சீனிவாசன் அவர்களுடன் இணைந்து பணியாற்றி, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்களை தொழிற்சங்கத்தில் இணைத்து சங்கத்தினை பலப்படுத்துவதை தன் முழு முதல் பணியாக மேற்கொண்டார்.

கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு அகில இந்திய அளவில் சங்கம் நிறுவிட **AIBEA** முடிவு செய்து, **1987**இல் அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம் தோற்றுவித்த நாள் முதற்கொண்டு **AICBEF**ன் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட தோழர் பாலகிருஷ்ணன் தனது இறுதி மூச்சு வரை அப்பொறுப்பில் திறம்பட பணியாற்றி, கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பணிநிலை மேம்பாட்டிற்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார்.

அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தினை பெரும்பான்மையான கூட்டுறவு வங்கி ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மிகப் பெரிய அமைப்பாக தோழர் **P** பாலகிருஷ்ணன் உருவாக்கினார். தோழர் தாரகேஷ்வர் சக்ரவர்த்தி, தோழர் **N** சம்பத், தோழர் சுஷில் கோஷ் மற்றும் தோழர் **C H** வெங்கடாசலம் ஆகிய தலைவர்களுடன் நெருங்கிப் பணியாற்றி நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்களை ஒன்றிணைத்து கூட்டுறவு வங்கி ஊழியர் இயக்கத்தினை வலுப்படுத்தி, கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஒப்பற்ற தலைவராக உருப்பெற்றார்.

நமது நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கி அமைப்பினை துடிப்புமிக்கதாகவும், கூட்டுறவு அமைப்பிற்கு புத்துயிர் அளித்திடவும் தோழர் **P** பாலகிருஷ்ணன் அவர்கள் பல்வேறு செயல்திட்டங்களை அறிவித்துப் போராடினார்.



நலிவுற்றிருந்த சிறிய கூட்டுறவு வங்கிகளை சீரமைத்திடவும், வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திடவும் அவர் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு மறுமலர்ச்சியினைப் பெற உதவியது.

தோழர் **P** பாலகிருஷ்ணன் அவர்கள் தனது நேரத்தையும் ஆற்றலின் பெரும் பகுதியையும் கூட்டுறவுத் துறையின் மறுமலர்ச்சிக்காக செலவிட்டாலும், வங்கித்துறை மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செயல்பாடுகளில் முழுமையான ஈடுபாடு கொண்டு பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் எல்லைக்குள் தன்னை சிறைப்படுத்திக் கொள்ள அவர் ஒருபோதும் தன்னை அனுமதிக்கவில்லை. மாறாக, வங்கி ஊழியர்களின் இயக்கம் மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பதாகையின் கீழ் வங்கி ஊழியர்களின் பொது இயக்கத்துடன் எப்போதும் தன்னைப் பிணைத்துக்கொண்டு தொழிற்சங்கப் பணியாற்றினார்.

நமது இயக்கத்திற்கு அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், **2014**ல் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவராக தோழர் **P** பாலகிருஷ்ணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு மாநில சம்மேளனத்தின் தலைவராக கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டது அதுவே முதன்முறையாகும்.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினராகப் பணியாற்றி, சங்கத்தின் நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்றார். பணிவான குணங்கள் தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களை இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களுடனும், அவரது அன்பும், பாசமும், அனைத்து தோழர்களுடனும் மிகவும் ஒன்றிணைந்து இயக்கப் பணிகளில் ஈடுபடவைத்தது.



கூட்டுறவு வங்கி ஊழியர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக விளங்கிய தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் நாடு முழுவதும் உள்ள வங்கி ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு பக்கபலமாகவும், அரசாங்க மட்டத்தில் கோரிக்கைகளை திறம்பட வலியுறுத்துவதில் தனித்துவமான திறமை உள்ளவராகவும் திகழ்ந்தார்.

இலட்சக்கணக்கான கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய தோழர் பாலகிருஷ்ணன், கூட்டுறவு வங்கி ஊழியர்கள் ஓய்வூதிய உரிமை பெற இடைவிடாத முயற்சி செய்தார். கூட்டுறவு வங்கி ஊழியர்கள் இயக்கத்திற்கு அவரது வாழ்நாள் பங்களிப்பால் தோழர் P பாலகிருஷ்ணன் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நம்பிக்கைகளின் அடையாளமாக திகழ்ந்தார்.

தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களுடைய தொழிற்சங்க வாழ்க்கை மற்றும் அர்ப்பணிப்பு என்றென்றும் வங்கி ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும். தோழர் P பாலகிருஷ்ணனின் அவர்களின் நினைவு நாளில், தமிழக கூட்டுறவு வங்கி ஊழியர்களின் தொழிற்சங்க இயக்கத்தை மென்மேலும் வலுப்படுத்த நமது முயற்சிகளை தீவிரப்படுத்துவோம் என்று உறுதி ஏற்போம்.

இந்திய பொருளாதாரத்திற்கு வளர்ந்து வரும் ஆபத்து

2021 முதல் 2025 வரை கடந்த ஐந்து வருடங்களில்

ரூபாய் ஆறு இலட்சம் கோடி வங்கிக் கடன் தொகை தள்ளுபடி

2021 – 2021	1,33,384 கோடி
2021 – 2022	1,15,749 கோடி
2022 – 2023	1,27,237 கோடி
2023 – 2024	1,14.622 கோடி
2024 – 2025	91,261 கோடி
2025 APRIL TO JUNE	17,784 கோடி
2021 TO 2025	6,00,037 கோடி

வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாத மோசடிப் பேர்வழிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து கடனை வசூல் செய் !

பொதுத்துறை வங்கிகளை பாதுகாபோம் !

பொதுமக்கள் சேமிப்பினை பாதுகாக்க உறுதி ஏற்போம் !